අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන සහ වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය 'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு 'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
Ministry of Education, Higher Education and Vocational Education 'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112785818
info@moe.gov.lk www.moe.gov.lk

මගේ යොමුව / எனது இல. / My Ref. ED/03/40/04/9 – 2025 ඔබේ යොමුව / உமது இல. / Your Ref. දිනය / திகதி / Date 2025.12. 08

அனைத்து மேலதிக செயலாளர்கள்.

அனைத்து மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்,

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்,

கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்,

பிரதம ஆணையாளர் (ஆசிரியர் கல்வி)

**இலங்கை கல்வி நிர்வாக சேவை மற்றும் இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவை உத்தியோகத்தர்களுக்கு கல்வி முதுமானிப் பட்டப் பாடநெறிகளுக்கான (ஒரு வருட வார இறுதி) புலமைப்பரிசில்களை வழங்குதல் - 2025.**

பொதுக் கல்வி நவீனமயமாக்கல் செயற்றிட்டத்தின் (GEMP) கீழ், மேற்படி சேவைகளைச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கு கல்வி முதுமானி பட்டப் பாடநெறிகளைத் தொடர்வதற்காக முழுமையான புலமைப்பரிசில்களை வழங்குவதற்கு அமைச்சின் செயலாளரின் அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது.

இது தொடர்பில் ஆர்வம் காட்டும் மற்றும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்த உத்தியோகத்தர்கள் விண்ணப்பப் படிவங்களை இணைப்பு 01 மாதிரிப் படிவத்திற்கமைய 2025.12.19 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கும் வகையில், கல்விப் பணிப்பாளர், மனித வளங்கள் அபிவிருத்திக் கிளை, கல்வி, உயர் கல்வி மற்றும் தொழில் கல்வி அமைச்சு, இசுறுபாய, பெலவத்தை, பத்தரமுல்ல என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் மேற்கண்ட தலைப்பைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். (விண்ணப்பப் படிவத்தின் தெளிவான ஸ்கேன் பிரதி ஒன்றை Hrd.moefrom2025@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைப்பது அவசியமாகும்.)

விண்ணப்பப் படிவத்தை சமர்ப்பிப்பதற்காக பூர்த்தி செய்ய வேண்டிய தகைமைகள்:

1. இலங்கை கல்வி நிர்வாக சேவை அல்லது இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவை உத்தியோகத்தராக இருத்தல்.
2. 2025.12.19 ஆந் திகதிக்கு 55 வயதிற்கு குறைந்தவராக இருத்தல்.
3. பட்டப் பின் பட்டத் தகைமைகளைப் பூர்த்தி செய்யாத உத்தியோகத்தராக இருத்தல் அல்லது இதற்கு முன்னர் பட்டப் பின் பட்டப் பாடநெறி ஒன்றைத் தொடர்வதற்காக முற்பணம் அல்லது பாடநெறி கட்டண மீள்செலுத்துகை என அரச நிதியைப் பெறாத உத்தியோகத்தராக இருத்தல். (முதுமானி பட்டத் தகைமைகளைப் பூர்த்தி செய்யாத உத்தியோகத்தர்களுக்கு சிரேஷ்டத்துவத்தின் அடிப்படையில் முன்னுரிமை வழங்கப்படும்.)

ගරු අමාත්‍යතුමිය / கௌரவ அமைச்சர் / Hon. Minister
+94112784832
+94112784825
minister.education@moe.gov.lk
ලේකම් / செயலாளர் / Secretary
+94112784811
+94112785162
secretary.education@moe.gov.lk
moesecretaryoffice@gmail.com

Scanned with CamScanner

4. இது ஆங்கில மொழி மூலம் நடத்தப்படும் பாடநெறி என்பதால், ஆங்கில மொழிப் புலமை கவனத்தில் கொள்ளப்படும்

இந்த ஒரு வருட வார இறுதிப் பாடநெறிக்காகத் தெரிவு செய்யப்படும் உத்தியோகத்தர்கள், பாடநெறியை நிறைவு செய்ததன் பின்னர் நிர்ணயிக்கப்படும் கட்டாய சேவைக்காலத்திற்கு உட்பட்டவராக இருக்க வேண்டும், அத்துடன் ஆரம்பிப்பதற்கு முன்னர் 1998.02.21 ஆம் திகதியுடைய பொது நிர்வாகச் சுற்றுநிருப இலக்கம் 05/98 இற்கமைய உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திட வேண்டும்.

இவ் விடயம் தொடர்பில் தங்களது **நிறுவனம்/ மாகாணத்தின் உரிய உத்தியோகத்தர்களை அறிவுறுத்துவதற்குத்** தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு, பூரணப்படுத்தப்பட்ட செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை மேலுள்ள அறிவுறுத்தல்களின்படி அனுப்பி வைக்குமாறு **தயவுடன் கோருகின்றேன்.**

இவ் விடயம் தொடர்பில் தங்களால் வழங்கப்படும் ஒத்துழைப்பினைப் பெரிதும் மதிக்கின்றேன்.

சுஜாதா குலேந்திரகுமார்
மேலதிக செயலாளர் (கொள்கை, திட்டமிடல் மற்றும் செயலாற்றுகை மீளாய்வு)
செயலாளருக்காக

Scanned with CamScanner